[3rd November 1958

SRI J. MATHA GOWDER : நீலகிரி ஜில்லாவில் நடைபெறும் புங்கலூர் கம்பளி தொழிற்சாலைக்கு வேண்டிய சாமான்கள் கொடுக்கப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியவந்திருக்கிறதா ? அப்படியானால் அதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTHAVATSALAM : அதைப் பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. கனம் அங்கத்தினர் என்னிடத்தில் வந்து அந்த விவரங்களை எல்லாம் தெரிவித்தால் அதற்கு வேண்டிய கவனம் செலுத்தலாம்.

Checking of motor vehicles at Alumpannai

* 800 Q.—SRI M. S. SELVARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி ஜில்லா, ஆளும்பண்ணையில் ராஜ்யம் பிரிவினைக்கு முன் இருந்ததைப்போல போலீஸார் மோட்டார் வண்டிகளைப் பரிசோதனை செய்து அனுப்பினார்களா?

(ஆ) அப்படியானால் அதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) There is no place as Alumpannai in Kanyakumari district. It is presumed that the member is having in mind the village " Aramboli ". Buses and lorries stop at the police station in this village to sign a register maintained under the Madras Motor Vehicles Rules at the Police station. The police are not checking the vehicles there.

Medical facilities under the Plantation Labourers Act

* 801 Q.—SRI N. MARUDACHALAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தோட்டத் தொழிலாளர் சட்டப்படி 1956 முடிவுக்குள் வைத்திய வசதி செய்து கொடுக்காத தோட்ட முதலாளிகள் மீது சர்க்கார் ஏதாவது நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தோட்டத் தொழிலாளர் சட்டம் 1956-ம் ஆண்டு ஜனவரி முதலிலிருந்துதான் அமுலுக்குக்கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒரு சில தோட்ட முதலாளிகளைத் தவிர மற்றெல்லோரும் வைத்திய வசதி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இது ஒரு புது சட்டமாகையாலும் வைத்திய வசதிகள் செய்வதற்குப் பணம் தேவைப்படுவதாலும் வசதி செய்து கொடுக்காத தோட்ட முதலாளிகள் மீது எவ்வித நடவடிக்கையும் உடனே எடுக்காமல் இந்தச் சட்டப்படி செய்ய வேண்டிய வசதிகளைச் செய்யும் விஷயத்தில் தொழில் இலாகா உதவி புரிந்து வந்தது. அவர்களும் ஒரு மாதத்திற்குள் இந்த வசதிகளைச் செய்து கொடுக்கும்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

SRI N. MARUDACHALAM : சில தோட்ட முதலாளிகள் வைத்திய வசதி செய்து கொடுக்காமல் இருக்கிறார்கள். அம்மாதிரி இடங்களில் அரசாங்கமாவது வைத்திய வசதி செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்குமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 257 தோட்டங்களில் இது வரையில் வைத்திய வசதி செய்வதற்காக 214 தோட்டங்கள் திட்டங்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள். அவை பரிசீலனையில் இருக்கின்றன. 114 தோட்டங்களுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுவிட்டது. தோட்டக்காரர்கள் செய்ய வேண்டிய கடமையை அரசாங்கம் ஏற்றுக்கொள்வது சரியல்ல. அவர்களைக்கொண்டே சட்டப்படி என்னென்ன வசதி செய்து கொடுக்கவேண்டுமோ அவற்றைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யப்படுகிறது.